# யாழ். ஆஸ்பத்திரி மின்சாரவேலைகள் பூர்த்தி


விலை ரூபா 3-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 ஐப்பசி: 3 றூஅவ்வல் பிறை: 30 இதழ்: 178
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 20-10-1990


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி மின்சார வேலைகளைக் கவனித்துவரும் மின்சார சபை அங்கு தேவையான திருத்த வேலைகளை மேற்கொண்டு நீர் மின்.சாரத்தையும், ஜெனரேட்டர் மூலம் மின்சாரத்தையும் வழங்குவதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

மின்சார உபகரணங்கள் கைவசம் இல்லாதபோதும், மின்சார சபை அதிகாரிகளின் முயற்சியினால் இவ்வேலைகள் இருக்கும் பொருள்களைக் கொண்டு பூரணப்படுத்தப் பட்டுள்ளன. ஆஸ்பத்திரி விரைவில் இயங்கவிருப்பதால் இவ்வேலைகள் பூரணப்படுத்தப் பட்டுள்ளன. (ச)

ஊர்காவற்றுறையில்

## வீடுகள் உடைத்து இராணுவம் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையில் நிலைகொண்டிருக்கும் ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் அங்குள்ள வீடுகளை உடைத்து கொள்ளையடித்து வருகின்றனர்.

கடந்த வாரம் கரம்பனிலுள்ள தமது வீட்டினைப் பார்க்கச் சென்ற பலர் தமது

(4ம் பக்கம் பார்க்க)

## கட்டுவன், குரும்பசிட்டியில் மோதல்:

# பத்து இராணுவத்தினர் பலி

# 35 படையினர் படுகாயம்!

## 5 புலிகள் வீரமரணம்

[யாழ்ப்பாணம்]

**விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே கட்டுவன், குரும்பசிட்டிப்பகுதிகளில் நேற்று ஐந்தாவது நாளாக நடந்த கடும்மோதலில் 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 35 படையினர் படுகாயம் அடைந்தனர். இக்கடும்போரில் ஐந்து தமிழீழ விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்தனர்.**

நேற்று அதிகாலை முதல், அகோர பொம்மர் குண்டு வீச்சு, ஷெல், பீரங்கித்தாக்குதலுடன் கட்டுவன், குரும்பசிட்டி பகுதிகளில் முன்னேற முயன்ற அரசபடையினரை விடுதலைப்புலிகள் மடக்கித் தாக்கியதில் மேற்படி 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

விடுதலைப்புலிகளின் தரப்பில் அன்ரன் (ஈச்சமோட்டை), குட்டி (பருத்தித்துறை), அனுஷன் (தெல்லிப்பளை), சுவந்தன் (முல்லைத்தீவு), சின்னமணி ஆகிய ஐவர் வீரமரணமடைந்தனர்.

நேற்று முன்தினம் குரும்பசிட்டி பாடசாலைக்கு அருகாமையில் இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இடம்பெற்றகடும் மோதலில் இராணுவத் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டது.

இம்மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் நெல்சன் (பூநகரி), திசோபன் [செல்லையா சற்குணநந்தன் கோப்பாய்) தமிழ்ச்செல்வன் [மன்னார்]. கந்தையா கந்தசாமி உதயகுமார் [கரவெட்டி] மரியதாஸ் டானியல் [கிருஷ்ணபிள்ளை நகுலேஸ்வரன்) - சுழிபுரம் ஜெனி ஆகியோர் வீரமரணமடைந்தனர். [வி]

சுன்னாகத்தில்

## அவ்ரோ தாக்குதல் வீடுகள் சேதம்!

[காங்கேசன்துறை)

சுன்னாகம் வாழைக்குலை சந்தைக்குப் பின்புறம் நேற்று மாலை 2-30 மணிக்கு அவ்ரோ வீசிய குண்டினால் பல வீடுகள் சேதமடைந்தன.

ஏழாலைப் பகுதியிலிருந்து வந்து இங்கு தங்கியிருந்த அகதிகள் மயிரிழையில் உயிர் தப்பினர். ஒரு பெண் குழந்தைக்குக் கையில் சிறு காயம் ஏற்பட்டது. (86)

பலாலி, வசாவிளான் மக்கள்

## தென்மராட்சி, வடமராட்சி நோக்கி இடம் பெயர்வு!

(வடமராட்சி)

மல்லாகம், சுன்னாகம், அளவெட்டி, கொல்லங்கலட்டி, பலாலி, வசாவிளான், புன்னாலைக்கட்டுவன், தெல்லிப்பழை, உரும்பராய் போன்ற இடங்களில் தொடர்ந்து இடம் பெற்று வரும் வான் தாக்குதலினாலும், ஷெல் தாக்குதலினாலும் இடம் பெயர்ந்த ஆயிரக்காணக்கான மக்கள் வடமராட்சி, தென்மராட்சிப்பகுதிகளுக்கு கால் நடையாக சென்ற வண்ணமிருந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

பலாலி காங்கேசன்துறையில்

## பயங்கர விமான தாக்குதல், கல்லூரி கடைகள் சேதம்

(காங்கேசன்துறை)

பலாலி, காங்கேசன்துறைப் பகுதிகளில் நேற்று நடந்த பயங்கர விமானத் தாக்குதல்களில் கல்லூரிகள், கடைகள் சேதமடைந்தன.

நேற்றுக்காலை 5-30 மணிக்கு வந்த சீனத் தயாரிப்பான வை-12 ரக விமானம் குண்டுகளைப் பொழிந்து செல்ல அதைத் தொடர்ந்து இரு பொம்மர்கள் வந்து தாக்குதல் நடத்தின.

வழமைக்கு மாறாக நேற்றுத் தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம் பகுதிகளிலும் விமானத் தாக்குதல்கள் இடம் பெற்றன,

தெல்லிப்பழைச் சந்திப் பகுதியில் போடப்பட்ட பொம்மர் குண்டுகளால் யூனியன் கல்லூரி, தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி ஆகியனவும், மற்றும் 5 கடைகள், மில் ஆகியனவும் சேதம் அடைந்தன.

பலாலியில் இருந்து ஏவப்படும் ஷெல்கள் மல்லாகம், சுன்னாகம் பகுதிகளில் பரவலாகப் பல இடங்களிலும் வெடித்துச் சிதறியதால் பல வீடுகள் சேதமடைந்தன.

நண்பகல் அளவில் பெரும்

(4ம் பக்கம் பார்க்க)

## கோட்டையில் பறப்பது புலிக் கொடியா?

### இளைஞரிடம் படையினர் கேள்வி

(புங்குடுதீவு)

நயினாதீவில் முகாமிட்டிருக்கும் கடற்படையினரால் அப்பகுதிகளுக்கு செல்லும் பிரயாணிகள் தீவிரமாக சோதனையிடப்பட்டுவருவதாக தெரிகிறது.

மேற்படி சோதனையில் ஈடுபட்டிருக்கும் படையினர் அடையாள அட்டைகளை பார்வையிட்ட பின்னர் நயினாதீவு என்று எழுதப்பட்டிருக்கும் அடையாள அட்டைகளை உடையவர்கள் இருந்தால்தான் அப்பகுதிகளுக்கு அனுமதிக்கப்படுவார்கள்இல்லையேல் திருப்பி அனுப்பிவிடப்படுகின்றார்கள் அப்பிரயாணி இளைஞராக இருந்தால் புலிகளை தெரியுமா? யாழ் கோட்டையில் பறப்பது புலிக்கொடியா? என்ற கேள்விகளை கேட்டு முகாமுக்குள் கொண்டு செல்லப்படுகின்றார்களாம்.

அதுமட்டுமல்லாமல் அவர்கள் கடுமையான சித்திர வதைகளுக்குள்ளாக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. (101)

## யாழ்ப்பாண லொறிகள் கொழும்பில் பறிமுதல்

(கொழும்பு)

கொழும்பில் இராணுவமும் பொலிஸாரும் யாழ்ப்பாண லொறிகளை தற்போது பறிமுதல் செய்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெங்காயம், புகையிலை, மிளகாய், வாழைக்குலை போன்ற பொருட்களை கொழும்புக்கு எடுத்துச் செல்லும் தமிழர்களின் லொறிகளை இராணுவத்தினர் பறிமுதல்செய்து கொழும்புத் துறைமுகத்துக்கு கொண்டுசென்று அங்கு உணவுப்பொருட்களை ஏற்றிக் கொண்டு மட்டுநகர், திருகோணமலை, அம்பாறைப் பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுவதாகக் கூறப்படுகின்

(4-ம் பக்கம் பார்க்க)

# யாழ். கோட்டைக்குள் 3 மணி நேரம் - 5

## பொலிஸ் அதிபர் விடுதிக்குள் இரும்பு பெட்டிகள் உடைத்து திறந்த நிலையில் இருந்தன!

யாழ். வீரசிங்கம் மண்டபப்பகுதிக்கு வந்துவிட்டோம். கோட்டை முனையிலிருந்து பார்க்கும்போது, அந்த மண்டபம் பலத்த சேதமடைந்திருந்தது தெளிவாகத் தெரிந்தது.

அந்த மண்டபம் எத்தனையோ பழைய சம்பவங்களை நினைவு படுத்தியது. தமிழாராய்ச்சி மாநாட்டின்போது அந்த மண்டபம் மக்கள் வெள்ளத்தால் நிரம்பிவழிந்த காட்சி; அதன்பின் பொலிசார் நடத்திய அட்டகாசம்; எட்டுப் பேர் பலியான சம்பவம் எல்லாம் மனதில் நிழலாடின. அமரர் ஜி ஜி யின் இறுதி அஞ்சலி, தந்தை செல்வாவின் இறுதி அஞ்சலி எல்லாம் இந்த மண்டபத்தில் தான் இடம் பெற்றது. அப்போதெல்லாம் தினமும் மக்கள் நடமாடிய அந்த மண்டபம், இன்றுஇருள் சூழ்ந்து அமைதியுடன்காணப் பட்டது.

### முற்றவெளி கூட்டங்கள்

அந்த மண்டபத்திற்கு எதிரிலுள்ள முற்றவெளியில் கடந்த ஐம்பது ஆண்டுகாலமாக நடந்த அரசியல்கூட்டங்கள் அக்கூட்டங்களில் கட்சித் தலைவர்கள் ஆற்றிய உரைகள் எல்லாம் நினைவுக்கு வந்தது.

கிங்கொங் – தாராசிங் மல்யுத்தம், கமலா சர்க்கஸ், அப்போலோ சர்க்கஸ், களியாட்டு விழாக்கள் எல்லாம் இந்த முற்றவெளியில் நடந்தகாலத்தில் ஆயிரக்கணக்கான மக்களின் நடமாட்டம் காணப்பட்டது. இன்று காக்கை குருவியைக் கூட காணமுடியவில்லை.

### கடைசி முனைப்பகுதி

நாங்கள் முனீஸ்வரன் கோவில் பகுதியை நோக்கிச் செல்கின்றோம். இதுதான் கடைசி முனைப்பகுதியாகும். இந்தக் கொத்தளப் பகுதியிலும் பல சென்றிகள் காணப் பட்டது.

இந்தப் பகுதிக்கு வந்தபோது மீண்டும் மழை ஆரம்பித்துவிட்டது. அதனால் ‘சென்றி’ ஒன்றுக்குள் புகுந்துவிட்டோம். சென்றிக்குள் இராணுவத்தினர் இறுதியாக ஓடிச்சென்றபோது இருந்த பொருட்கள் அப்படியே சிதறிக்கிடந்தன.

அந்த முக்கால்மைல் கொத்தளப் பகுதியைச் சுற்றி நாங்கள் புறப்பட்ட இடத்திற்கு மீண்டும் வந்துவிட்டோம்.

கீழ்ப்பகுதிக்கு இறங்கி தேவாலயம் நோக்கி செல்கிறோம். வழியில் நூற்றுக்கணக்கான சதுரக்கற்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இவையெல்லாம் தேவாலய நிலப் பகுதியிலிருந்து அகற்றப்பட்டவை.

### தேவாலயத்தில் புலிக்கொடி!

மீண்டும் தேவாலயத்திற்குள் செல்கின்றோம். அந்தத் தேவாலய உச்சியில் இரண்டு புலிக்கொடிகள் கம்பீரமாகப் பறந்து கொண்டிருக்கிறது.

இந்தத் தேவாலயம் ஆரம்பத்தில் ஒரு சவச்சாலையாகவே பாவிக்கப்பட்டு வந்திருக்கிறது, ஒல்லாந்தர் கோட்டையைக் கைப்பற்ற நடத்திய போரில் பலியான உயர் அதிகாரிகளும், மதகுருவானவர்களும் மரணமானபின் இந்த இடத்தில்தான் புதைக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. அவர்கள் நினைவாக அந்தஇடத்தில் இந்தத்தேவாலயம் ஒரு ஞாபகார்த்த மண்டபமாக அமைக்கப்பட்டு அவர்கள் புதைக்கப்பட்ட இடங்களில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டிருந்தது. அந்த அதிகாரிகள், குருவானவர்கள் பெயர் விபரங்களும் அந்தக்கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருந்தது.

பின்னர் போரில் உயிர் நீத்த அதிகாரிகளுக்கும். குருவானவர்களுக்கும் படைவீரர்கள் அங்கு சென்று அஞ்சலி செலுத்துவது வழக்கமாக இருந்து வந்தது: நாளடைவில் இது ஒரு தேவாலயமாக மாறிவிட்டது. பறங்கித்தெரு மற்றும் பகுதிகளில் அக்காலத்தில் வாழ்ந்து வந்த ஒல்லாந்தர்கள் இந்த தேவாலயத்திற்கு சென்று வழிபட்டு வந்திருந்தனர்,

இந்த மண்டபம், ஒருகாலத்தில் தற்காலிக விசாரணை மன்றமாக, நீதிமன்றமாகவும் பாவிக்கப்பட்டு வந்ததிற்கான அறிகுறிகளும் இருந்ததாக கூறப்பட்டது. விசாரணைத் தலைவரின் ஆசனம், சாட்சிகூண்டு எல்லாம் முன்னர் அங்கு காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இத்தகவலை கோட்டையில் கடமையாற்றிய இளைப்பாறிய ஒரு பொலிஸ் சார்ஜன் தெரிவித்தார்.

### “சேதமடைந்த நிலையில் வாகனங்கள்”

### ஆரம்பத்தில் சவச்சாலை

ஆரம்பத்தில் சவச்சாலையாக இருந்த இந்த மண்டப பகுதியில்தான் புலிகளின் தாக்குதலுக்கு பலியான சிங்கள இராணுவத்தினர் அவசரமவசரமாக, அரைகுறையாக புதைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் புதைக்கப்பட்ட இரு குழிகள் பற்றி ஆரம்பத்தில் இங்கு தெரிவித்திருந்தேன்.

### தேவாலய கதவு

இந்த தேவாலயத்தின் பிற்பகுதியில் கோட்டையின் வெளிப்பகுதிக்கு செல்வதற்கு ஒரு சிறிய கதவு இருக்கிறது. ஆனல் இந்த வழியால் அகழியைக்கடந்து செல்லமுடியாது இந்தக்கதவு எப்போதும் மூடப்பட்டிருக்கும். அவசியம் ஏற்படும்போது மட்டும் தான் திறக்கப்படும்.

தேவாலயத்திலிருந்து வெளியேறி ‘கிங்ஸ் கவுஸ்’ நோக்கி செல்கின்றோம். முக்கிய தலைவர்கள், பிரமுகர்கள். வெளிநாட்டு தலைவர்கள், பிரதமர், ஜனுதிபதி வந்தால் அக்காலத்தில் இந்த கிங்ஸ் கவுஸில்தான் தங்குவது வழக்கம்.

1975ம் ஆண்டளவில் இந்த கிங்ஸ் கவுஸ் சுற்றுடலில் ஒரு பகுதி சித்திரவதை கூடமாக பாவிக்கப்பட்டு வந்தது. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்கள் எல்லோரும் இங்குதான் விசாரணைக் குட்படுத்தப்பட்டனர். பொலிஸ் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை தலைமையில் இயங்கிய குழுவினர் இங்கு இரவு பகலாக விசாரணைகளை நடத்தி வந்தனர். இன்று அந்த பகுதி இருந்த இடமே தெரியவில்லை. சிறைக்கூடங்களும் உருப்படியாக இல்லை.

### பொலிஸ் அதிபர் விடுதி

இன்று அந்த கிங்ஸ் ஹவுஸ் புலிகளின் தாக்குதலினல் முற்றுகசேதமடைந்து காணப்பட்டது. இதற்கு அருகில் பொலிஸ் அதிபர் விடுதி இருந்தது. விடுதிக்கு முன்னர் இருந்த ‘வயர்லஸ்’ கோபுரம், சரிந்து விழுந்திருந்தது. பொலிஸ் அதிபர் விடுதிக்கு முன்னுல் சில வாகனங்கள் சேதமடைந்து பாவிக்க முடியாத நிலையில் பழுதடைந்து காணப்பட்டது. யாழ்ப்பாணம் டிப்போவைச் சேர்ந்த 23 சிறி 407 இலக்க வ. போ. ச. பஸ் ஒன்றும் அப்பகுதியில் காணப்பட்டது. இந்த பஸ்ஸின் வெளிப்பகுதி நல்ல நிலையிலிருந்தது சிலசமயம். இன்ஜின் பகுதி பழுதடைந்திருந்ததால் அங்கு அந்த பஸ் விடப்பட்டிருக்கலாம்.

திரு எஸ். சுந்தரலிங்கம் பொலிஸ் அதிபராக கடமையாற்றிய காலத்தில், இந்த பொலிஸ் அதிபர் விடுதியில் தான் இருந்தார். அவரது சகோதரர் கண் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். பரராஜசேகரம், வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டு வந்து அந்த விடுதியில் தங்கியிருந்தார். அவரை சந்தித்து பேட்டி காண்பதற்கு முன்பு ஒரு சமயம் இந்த பொலிஸ் விடுதிக்கு சென்றிருக்கிறேன். அப்பொழுது இருந்த விடுதியா? இது என்று சந்தேகிக்கும் அளவிற்கு முற்றாக சேதமடைந்து அடையாளம் தெரியாமல் இருந்தது.

### இரும்புப் பெட்டி

பொலிஸ் அதிபர் விடுதி விறுந்தையில் ஓடுகள் உடைந்து விழுந்து கிடந்தன. நடு ஹோலுக்கு சென்றபோது இரும்பு பெட்டிகளின் பூட்டு உடைக்கப்பட்டு திறக்கப் பட்டநிலையில் காணப்பட்டது, ஒரு இரும்புப்பெட்டி எரிக்கப் பட்டபின் திறக்கப்பட்ட அடையாளம் தெரிந்தது. அவசர அவசரமாக இந்த இரும்புப் பெட்டிகளை உடைத்துத் திறந்திருக்கிறுர்கள் என்பது தெளிவாகிறது.

**கா. யோகநாதன்**

முன்கூட்டியே இராணுவத்தினர் வெளியேற திட்டமிட்டிருந்ததால் அந்த இரும்புப் பெட்டி பாதுகாப்பாக வைக்கப்பட்ட அறைகளில் வைக்கப்பட்ட இடத்திலேயே திறப்பினுல் திறக்கப்பட்டிருக்கும் திறப்பு இல்லாத பட்சத்தில் அந்த இடத்தில் உடைத்து திறக்கப்பட்டிருக்கும் பொலிஸ் அதிபர் விடுதியின் ஹோலுக்கு அந்த இரும்புப் பெட்டி வரவேண்டிய காரணம் என்ன? பெட்டியை உடனடியாக கொண்டுபோகலாம் என பாதுகாப்பு அறையிலிருந்து தூக்கி வந்திருப்பார்கள். அது முடியமல் போகவே, ஹோலுக்குள் போட்டு. அவசர அவசரமாக உடைத்து திறந்திருக்கிறுர்கள் என்பது தெளிவாகிறது.

(தொடரும்)

---

## பாதுகாப்பு செலவு: 1,179 கோடி!

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம், அடுத்தாண்டு பாதுகாப்பு செலவினங்களுக்கு ஆயிரத்து நூற்று எழுபத்தெட்டு கோடி 13 லட்சத்து 27 ஆயிரம் ரூபாவை வரவுசெலவுத்திட்ட நிதியில் ஒதுக்கியுள்ளது. இத்தொகை எண்பத்தாரும் ஆண்டுக்கு பின்னர் ஒதுக்கப்பட்ட கூடிய தொகையாகும். இத்தொகை தேசிய வருமானத்தில் இருபது சதவிகிதமென பொருளாதார வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர். வடக்கு கிழக்கு யுத்தம் ஆரம்பமான பின்னர் இத்தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

(ச)

---

### ஓயில் திருட்டினுல்

## வண்ணை, கொட்டடி பகுதிகளுக்கு மின்சாரம் கிடைக்க தாமதமாகும்!

(யாழ்ப்பாணம்)

‘‘வண்ணார்பண்ணை கொட்டடிப் பகுதிகளுக்குமின்சாரம் வழங்குவதற்கு பல நாட்கள் பிடிக்கும் என்றும் இப்பகுதிகளில்உள்ள‘‘ரான்ஸ்போமர்’’ அனைத்திலுமுள்ள ஓயில்கள் திருடப்பட்டுவிட்டதினுல் இந்தநிலை ஏற்பட்டுள்ளது.’’

இவ்வாறு யாழ்.மாநகர சபை மின்சாரப்பகுதி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ் நகரில் பாதிக்கப்பட்ட மின் இணைப்புகள் அனைத்தும் பெரும்பாலும் சீர்செய்யப் பட்டுவிட்டாலும் மேற்படி ‘‘ஓயில்’’ திருட்டுகள் பல இடங்களில் நடைபெற்றுள்ளதால் அந்த இடங்களுக்கு மின்சாரம் வழங்கமுடியவில்லை என்றும் இவற்றுக்கு தேவையான ஓயில்கள் கொழும்பிலிருந்து வந்த பின்பே ஓயில்களினுல் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு மின்சாரம் கிடைக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படும் என்றும் அந்த உத்தியோகத்தர் மேலும் தெரிவித்தார்.

(வி)

---

### முல்லைத்தீவில்

## இராணுவ நடவடிக்கையால் கடற்றெழிலாளர் பாதிப்பு

(மாங்குளம்)

முல்லைத்தீவு கடற்கரையோரப்பகுதியில் நீண்ட நாட்களாக இராணுவத்தினர் நிலைகொண்டு வருவதினுல் மீனவர்களின் எதிர்கால வாழ்க்கை முழுக்க முழுக்க பாதிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் கரையோரப் பகுதியில் நிலைகொண்டு வருவதால் மீனவர்கள் கடல் தொழிலுக்கு செல்ல முடியாத நிலை தொடர்கிறது. இதனுல் சுமார் 5000 க்கு மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் தமது நிரந்தரத் தொழிலை இழந்ததினுல் ஒரு நேர உணவைக்கூட உட்கொள்ள முடியாது நிர்க்கதியாகியுள்ளனர்.

இராணுவத்தினரின் கண்ணுக்கு எட்டாத பகுதிகளில் மீன்பிடிக்கச் செல்லும் ஒரு சிலமீனவர்கள் அடிக்கடி நடைபெறும் இராணுவ ஷெல் வீச்சுக்கும், விமானத் தாக்குதலுக்கும், கடற்படைத் தாக்குதலுக்கும் ஹெலித்தாக்குதலுக்கும் ஆளாகி வருகின்றனர்,

தற்போது அதிக வருவாயைக் கொடுக்கும் இருல் சீசன் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இந்நடவடிக்கையால் அவர்கள் வருவாயை இழந்துள்ளனர். இது இவ்வாறிருக்க இராணுவத்தினர் கரையோரப் பகுதியில் உள்ள மீனவர்களது மூலவளங்களான விலை மதிப்புள்ள வாடிகள் வலைகள் வள்ளங்கள் போன்றவற்றையும் தீ வைத்துள்ளனர்.

இராணுவ நடவடிக்கையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல்வேளாண்மைச் செய்கையும் பாதிக்கப்பட்டு பல ஏக்கர் நிலங்கள் தரிசு நிலங்களாக காணப்படுவதால் உணவுத்தட்டுப்பாடு நிலவும் அபாய அறிகுறிகள் தென்படுகின்றன.

---

## இராசி பலன்

**20 - 10 - 1990**
**சனிக்கிழமை**

துதிகை இரவு 12–13வரை, சுவாதி மு. ப. 10-13 வரை அமிர்தசித்தயோகம், ராகு காலம் காலை 9-02 முதல் 10-32 வரை, சுபநேரம் மாலை 3-02 முதல் 4-02 வரை.

மேஷம்: எண்ணியது கிடைக்கும், தொழில் லாபம், குடும்ப குதூகலம், சகோதர உதவி.

இடபம்: காரியசித்தி, பணவசதி, அதிகாரிகள் பாராட்டு, அந்நிய வாசம்.

மிதுனம்: போட்டி மனப்பான்மை, கருத்துமோதல், அந்நியர் உதவி, மனவேதனை.

கடகம்: குடும்பப் பிரிவு, தொழில் கஷ்டம், அலைச்சல், வைத்தியச் செலவு.

சிங்கம்: தொழில் மாற்றம், இனசனப்பகை, வீட்டில் சுபகாரியம், பயணம்.

கன்னி: மனப் போராட்டம், பழைய நினைவுகள், அதிகாரிகள் தொல்லை, அகால போஜனம்.

துலாம்: எதிர்பாராத உதவி, பாராட்டு, மன நிறைவு, பெண் நட்பு.

(3-ம் பக்கம் பார்க்க)

# இஸ்ரேலுக்கு எதிராக பொருளாதாரத் தடை செய்க

## அரபு லீக் கோரிக்கை

(சூரிச்)

ஜெருசலத்தில் இஸ்ரேலியர்களின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக, இஸ்ரேலுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தவேண்டுமென, சூரிச்சில் நடைபெற்ற அரபு லீக் மாநாட்டில் அவசரத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள ஜெருசலத்தில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றைக் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டும் வைபவத்தில் பாலஸ்தீனியர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோது இஸ்ரேல் பொலிஸார் கண்மூடித்தனமாகச் சுட்டதில் 20 பாலஸ்தீனியர் அவ்விடத்தில் இறந்தமையால், இந்த நடவடிக்கை எதிர்ப்புத் தெரிவித்து இஸ்ரேலுக்கு எதிராகப் பொருளாதாரத் தடையை அமுல்படுத்துமாறு அரபு லீக் கோரியுள்ளது (ச)

# கடற்படையினரிடையே தீபாவளி வெடி ஏற்படுத்திய கிலி

(புங்குடுதீவு)

தீபாவளி திருநாளை கொண்டாடிய சிறுவர்களினால் கொளுத்தப்பட்ட பட்டாசு வெடிச்சத்தத்தினால் நயினாதீவு புங்குடுதீவு கடலில் ரோந்தில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் தங்களை விடுதலைப்புலிகள் தாக்கவந்து விட்டார்களோ என்ற அதிர்ச்சியுற்ற நிலையில் சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர்.

இதனையடுத்து கடற்படைத் தளத்திலிருந்தும் பலத்தவேட்டுச்சத்தங்களை கேட்கமுடிந்தது.

இச்சம்பவம் தீபாவளிதினத்தன்று பிற்பகல் இரண்டு மணியளவில் குறிகாட்டுவான் அண்டிய பகுதியில் நிகழ்ந்துள்ளது. அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது பின்னர் உண்மைநிலை அறிந்ததும் அமைதியை காணமுடிந்தது. (101)

# சென்னையிலிருந்து சிங்கப்பூருக்கு 'விக்னேஸ்வரா' வெள்ளோட்டம்

## முதல்வர் ஆரம்பித்து வைத்தார்

(சென்னை)

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் சென்னைத் துறைமுகத்திற்கும் சிங்கப்பூருக்கும் இடையிலானபயணிகள்,சரக்கு கப்பல் சேவை மீண்டும் திங்கள் முதல் ஆரம்பிக்கப்படஉள்ளது.

'விக்னேஸ்வரா' என்ற பெயருடைய இக்கப்பல் சேவையின் வெள்ளோட்டம் நேற்று முன்தினம் தமிழக முதலமைச்சர் திரு.மு.கருணாநிதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

800 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய குளிரூட்டப்பட்ட அறைகளை உடைய இக்கப்பல் சென்னையிலிருந்து புறப்பட்டு, மலேசியா ஊடாகச் சிங்கப்பூர் சென்றடையும்.

கடந்த 1979ம் ஆண்டு 'எம். வி. சிதம்பரம்' என்ற கப்பல் இதே வழிச் சேவையில் ஈடுபட்டிருந்த வேளையில் நடுக்கடலில் தீப்பிடித்து மூழ்கியதை அடுத்து இச்சேவை இடை நிறுத்தப்பட்டது.

இதே கப்பல் 1977ம் ஆண்டு இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழீழ மக்களைக் கொழும்பிலிருந்து காங்கேசன் துறைக்கு ஏற்றிவந்தது குறிப்பிடத்தக்கது. (அ

# தனியார்வாகனங்களை எடுக்க படையினருக்கு கட்டுப்பாடு

(கொழும்பு)

பாதுகாப்புப் படையினர் தமது தேவைகளுக்கு, கண்டபடி தனியார் வாகனங்களை எடுத்துச் செல்வது தடைசெய்யப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு.ரஞ்சன் விஜயரத்ன செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

தனியார் வாகனங்களைப் பாதுகாப்புப் படையினர் எடுப்பதானால் இராணுவத் தளபதி, பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் உத்தரவு இல்லாமல் தனியார் வாகனங்களைப் பாதுகாப்புப் படையினர் எடுக்கமுடியாது.

இதனைச் செய்யத் தவறும் பாதுகாப்புப் படையினர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (ச)

# கசிப்பு உற்பத்தி; 15 பேர் கைது

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 15 பேர் விடுதலைப்புலிகளால் கைதுசெய்யப்பட்டதுடன் பெருமளவு பரல்களில் அடைத்து வைக்கப்பட்டிருந்த கசிப்பும் நிலத்தில் ஊற்றப்பட்டது.

புங்குடுதீவு கிழக்குப் பகுதியிலுள்ள வல்லன், வீராமலை போன்ற இடங்களில் இருந்து சுமார் 15 மேற்பட்ட கசிப்பு உற்பத்தியாளரையும், வியாபாரிகளை கைது செய்த புலிகள் இதற்கு உபயோகிக்கப்பட்டிருந்த உபகரணங்களான பரல்கள், கேபிள்கள், றம், ரியூப்களையும் பறிமுதல் செய்தனர்.

பத்திற்கும் மேற்பட்ட பரல்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கசிப்பும் நிலத்தில் ஊற்றப்பட்டது. பின் கைது செய்யப்பட்டவர்கள் எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். (101)

# கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை

(பண்டத்தரிப்பு)

கிளிநொச்சி கனகபுரம் முதலாம் பண்ணை என்ற இடத்தைச் சேர்ந்த குலசேகரம் பிள்ளை தேவானந்தனின் தேசிய அடையாள அட்டை பண்டத்தரிப்பு சந்தையில் திரு எஸ். மதுரநாயகத்தால் கண்டெடுக்கப்பட்டது. மேற்படி அடையாள அட்டை ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

# மின் அணுக்களை கடத்தக்கூடிய பிளாஸ்டிக்

(லண்டன்)

பிரிட்டனில் உள்ள நிறுவனம் ஒன்று, மின் அணுக்களை கடத்தக்கூடிய புதிய பிளாஸ்டிக் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது. சிலிக்கோனுக்கு இணையாக இப்பிளாஸ்டிக், மின்னியல் தொழில்நுட்பத்துறையில் பயன்படுத்தமுடியுமென ஆராய்ச்சிகள் அறிவித்துள்ளன.

இப்புதிய கண்டுபிடிப்பால் பாரம் குறைந்த, கையடக்கமான தொலைக்காட்சிப் பெட்டிகள், கம்பியூட்டர் போன்ற சாதனங்கள் விரைவில் சந்தைக்கு வரவுள்ளன. (ச)

# தொற்றுநோய் தடுப்பு மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள பண்டத்தரிப்பு, சங்கானை, வட்டுக்கோட்டை, தொல்புரம், மானிப்பாய் ஆகிய இடங்களிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் நடைபெறும் சிறுவர் நலச் சிகிச்சை நிலையங்களில் குழந்தைப் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் தொற்று நோய்த் தடுப்பு மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

குழந்தைப் பிள்ளைகளுக்கு உரிய காலங்களில் வழங்கப்படும் போலியோத் தடுப்பு மருந்து, முக்கூட்டுத் தடுப்பு மருந்து போன்ற வகைகளும், கர்ப்பிணிகள் சிகிச்சை 'கிளினிக்'கில் கர்ப்பிணித் தாய்மாருக்குப் போடப்படும் ஏற்புத் தடை மருந்து வகைகளும் மேற்படி வைத்தியசாலைகளின் சிகிச்சை நிலையங்களில் முற்றாகக் கையிருப்பில் இல்லை.

இதனால், இக்'கிளினிக்'குகளுக்கு வருபவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இத்தடுப்பு மருந்துகள் யாவும் தற்போதைய மின் தடை காரணமாக மானிப்பாய் சுகாதார வைத்திய அலுவலத்திலுள்ள மண்ணெண்ணையில் இயங்கும் குளிரூட்டி சாதனப் பெட்டியில் வைத்து மேற்படி வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படுவது வழக்கம் என்றும், இங்கும் இத்தடுப்பு மருந்துகள் கையிருப்பில் இல்லாத காரணத்தால் கடந்த ஒரு மாத காலமாகக் 'கிளினிக்'குகளுக்கு வழங்கப்படவில்லை என்றும் அறியப்படுகின்றது. (72)

# 'போர் மண்ணிலே புனிதத் தாய்'

(அச்சுவேலி)

தமிழீழ விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட 'போர் மண்ணிலே புனிதத்தாய்' சிந்துநடை மேடைக்கூத்து பல இடங்களிலும் மேடையேற்றப்பட்டுவருகின்றது.

புலிகளின் வரலாற்றுப் பின்னணியையும் இந்தியா மற்றும் உலகநாடுகளின் கருத்துக்களையும் புராதன-நவீன நாடக மரபில் விளக்கும் ''போர் மண்ணிலே புனிதத் தாய்' சிந்துநடை மேடைக் கூத்தினை பார்க்கப் பெருந்திரளான மக்கள் வருகின்றனர். (74)

# திருமலையில் நிவாரணம் வழங்க துரித ஏற்பாடு!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் மீண்டும் பழைய நிலைமையை தோற்றுவிக்கவும், புனரமைப்பு பணிகளை துரிதப்படுத்தவும் ஏழு புனர்வாழ்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்குழுக்கள் நேற்று முன்தினம் திருகோணமலையில் அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவினால் அமைக்கப்பட்டது. இக்குழுவின் பணிகள் உடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக்குழுக்கள் வீடுகள் இழந்தவர்களுக்கு இருபத்தோராயிரம் ரூபாய்களை வழங்கவுள்ளது. (ச)

# மன்னாரில் வங்கிகள் 3 நாட்களே இயங்குகின்றன

(மன்னார்)

மன்னார் நகரிலுள்ள அனைத்து வங்கிகளும் கிழமைகளில் மூன்று நாட்கள் மட்டுமே இயங்குகின்றன.

திங்கள், புதன், வியாழன் ஆகிய நாட்களில் மட்டுப் மேற்படி வங்கிகள் நடைபெறுகின்றன.

மன்னார் கச்சேரியும் இயங்குகின்றது. அரசாங்க ஊழியர்கள் குடிநீர், உணவுப் பிரச்னையால் பெரும் இன்னல்களை அனுபவிக்கிறார்கள். மன்னார் நகரில் வசித்த குடிமக்களில் சிலர் வந்து தங்கள் பழைய இடங்களில் வசிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

மன்னார் நகர் வாசிகள், குடிநீர் பிரச்னையாலும் பெரிதும் கஷ்டமடைகிறார்கள். (153)

# முல்லைத்தீவில் இலவச நிவாரணம் வழங்கும் வேலைகள் துரிதம்!

(மாங்குளம்)

முல்லைத்தீவில் இலவச நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அம்மாவட்டத்திலுள்ள சங்கங்களின் கிளைகள் மூலமாகவே நிவாரணங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளது.

இடம்பெயர்ந்தோர் தொழில் வாய்ப்பிழந்தோர் வருமானம் 1500 ரூபாவுக்குட்பட்டோருக்கு இந்நிவாரணங்கள் வழகங்ப்படுகிறது. சமூக சேவை ஆணையாளரின் நியதிக்கமைய குடும்பத்தில் ஒரு அங்கத்தவருக்கு 84 ரூபாவுக்கும், இரண்டு அங்கத்தவர்களுக்கு 155 ரூபாவுக்கும், மூன்று அங்கத்தவர்களுக்கு 210 ரூபாவுக்கும், நாலு அங்கத்தவர்களுக்கு 252 ரூபாவுக்கும், ஐந்தும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களுக்கு 3.5 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இந்த நிவாரணங்களை வழங்குமாறு உதவி அரசாங்க அதிபர்களையும், கிராமசேவை உத்தியோகத்தர்களையும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் பணித்துள்ளார். (150)

## இராசிபலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

விருச்சிகம்: கைப்பொருள் தவறுதல், மனக்குமுறல், தொழில் நஷ்டம், குடும்பக் கவலை.

தனுசு: பயணங்களால் காரிய அனுகூலம், தொழில் சிறப்பு, காரிய பலிதம், மகிழ்ச்சி.

மகரம்: தொழில் பிணக்கு குடும்ப ஒற்றுமை, புத்திரர்கள் சிறப்பு, தெய்வதரிசனம்.

கும்பம்: தனித்தநிலை, பண மூலமான கவலை. குடும்பப் பிரிவு, அலைச்சல் மிகுதி.

மீனம்: வேண்டாத உறவு, தாய் வழி நினைவு, மனப் போராட்டம், விபத்து.

ஜோஸ்யர்.

கப்பலில் வந்த உணவுப்பொருட்கள்

# அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கு 450 தொன் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு நேற்றுமுன்தினம் காலை வந்தடைந்த குமண என்ற கப்பலிலிருந்து உணவுப் பொருட்களையும் மருந்துப் பொருட்களையும் இறக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

மேற்படிகப்பலில்வந்த 3000 தொன் உணவுப்பொருட்களில் 450 தொன் உணவுப்பொருள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குவந்துள்ளதாகதெரியவருகிறது. (153)

---

தீவுப்பகுதியில்

# கடற்படையினர் தீவிரரோந்துப்பணி

(புங்குடுதீவு)

தீவுப்பகுதிக் கடலில் கடற்படையினரின் ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளது,

நயினாதீவில் முகாமிட்டிருக்கும் கடற்படையினர் நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு ஆகிய கடற்பகுதிகளில் வழமையைவிடத் தமது ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ளதாகத்தெரியவருகிறது.

இதேவேளை நயினாதீவுக் கடற்கரையில் கட்டப்பட்டிருந்த தனியாருக்குச் சொந்தமான ஐந்திற்கு மேற்பட்ட படகுகள் கடற்படையினரால் இழுத்துச் செல்லப்பட்டன.

பாரிய பீரங்கிப் படகொன்றின் உதவியுடனேயே இப் படகுகள் கட்டிஇழுத்துச் செல்லப்பட்டன. (101)

---

ஹெலி, விமானங்களின்

## நடமாட்டம் அதிகரிப்பு மீன்பிடி தொழில் பாதிப்பு!

(வடமராட்சி)

வடமராட்சி கடற்கரையோரப் பகுதிகளில் ஹெலி மற்றும் விமானங்களின் நடமாட்டம் அதிகரித்து வருவதால் மீன்பிடித் தொழில் பெரும் பாதிப்படைந்துள்ளது.

ஹெலிகொப்டரிலிருந்து கடற்கரையோரங்களில் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதினால் கடலுக்கு சென்று மீன் பிடிப்பதற்கு மீனவர் அஞ்சுகிறார்கள்.

அரசபடைகளின் நடவடிக்கைகளினால் தொழிலின்றி நூற்றுக்கணக்கான மீனவர்கள் பட்டினி நிலையைஎதிர்நோக்கியுள்ளார்கள். (51)

---

## கொள்ளை முயற்சி முறியடிப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு வில்லன் பகுதியிலுள்ள ப. நோ. கூ. சங்கக் கிளையொன்றின் மீது நடைபெறவிருந்த கொள்ளைமுயற்சி தோல்வியில் முடிவடைந்தது.

கொள்ளையர் கூட்டம் ஒன்று இச்சங்கக்கிளையை உடைத்துக் கொள்ளை நடத்த முயன்று கொண்டிருந்தபோது பொது மக்களிடம் வகையாக மாட்டிக்கொண்டது. (101)

---

படையினர்

## கால்களை இழந்தனர்

[மட்டுநகர்]

மட்டுநகர் கிண்ணியடியில் ரோந்துசென்ற பொலிசாரும் இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளின் மிதிவெடியில் சிக்கியதில் ஒரு பொலிஸாரும், ஒரு இராணுவ வீரரும் கால்களை இழந்தனர். (வி)

---

2-வது டெஸ்ட்:

## பாகிஸ்தான் 229 - 3

(லாகூர்)

பாகிஸ்தானுக்கும், நியூஸிலாந்துக்குமிடையில் லாகூரில் நடைபெறும் 2-வது கிரிக்கெட் டெஸ்ரின் இரண்டாவது நாள் ஆட்டமுடிவில் பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 229 ஓட்டங்களைப் பெற்றது: நியூஸிலாந்து முதல் இன்னிங்ஸில் மொத்தம் 160 ஓட்டங்களைப் பெற்றது. (வி)

---

## நீர்வையில் முதலுதவி சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

சென். ஜோன்ஸ்அம்புலன்ஸ் படைப்பிரிவினால் நடத்தப்படும் முதல் உதவிச் சிகிச்சை நிலையம் நேற்று நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

ஆசிரியர் சிவராசாவின் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் முதல் உதவிப்பயிற்சியாளர், சிற்றூர் அவைத்தலைவர் உட்பட பல பிரமுகர்கள் முதல் உதவிச் சிகிச்சையின் முக்கியத்துவம் பற்றியும் இன்றைய போர்க்கால கட்டத்தில் இப்பயிற்சியின் அவசியம் பற்றியும் கருத்துரை வழங்கினர்.

---

முல்லைத்தீவில்

# பணப்புழக்கத்தை ஏற்படுத்த கொழும்பில் நடைமுறைக் கணக்கு!

### அரசாங்க அதிபர் நடவடிக்கை

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வங்கிகள் செயலிழந்ததை அடுத்து பணப் புழக்கத்தை ஏற்படுத்த முல்லைத்தீவு செயலகம் பெயரில் கொழும்பில் நடைமுறைக் கணக்கு திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

முல்லைத்தீவு, மாங்குளம், ஒட்டுசுட்டான் ஆகிய பகுதிகளில் இயங்கிவந்த இலங்கை வங்கி, மக்கள் வங்கிகள் முற்றாக செயலிழந்ததால் இப் பகுதியில் பணப்புழக்கம் மிக மோசமடைந்துள்ளது.

பணப்புழக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கொழும்பு மெற்றோ பொலிற்றன் இலங்கை வங்கிக்கிளையில் முல்லை அரச செயலகப் பெயரிலும் புதுக்குடியிருப்பு ப.நோ. கூ.சங்கப் பெயரிலும் திறப்பதற்குஅரசஅதிபர் திரு. க. பொன்னம்பலம் நடவடிக்கையெடுத்துள்ளார். கொழும்பில் கணக்கு திறந்து காசோலைகள் மூலம் கொழும்பு, வவுனியா, அனுராதபுரம் ஆகிய இடங்களில் உள்ள கூ. மொ. ஸ்தாபனங்களிலும் தனியார் ஸ்தாபனங்களிலும், பெற்றோலிய கூட்டுத்தாபனத்திலும் பொருட்களையும் மண்ணெண்ணை முதலியவற்றை கொள்வனவுசெய்வதற்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைமூலம் ப. நோ. கூ' சங்கங்களில் கூடுதலான பணம்புழக்கத்திலிருக்குமெனவும் இதனால் ஊழியர்களின் சம்பளம் ஒய்வூதியக் கொடுப்பனவுகள் சிரமமின்றி நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

---

## படையினர் ஒருவர் பலி

[மட்டுநகர்]

மட்டக்களப் புதுக்குடியிருப்பில் இராணுவத்தினர் ரோந்து சென்றபோது விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி இராணுவ தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டார். (வி)

---

## இரு படையினர் படுகாயம்

(மட்டுநகர்)

மட்டுநகர் பழைய பொலிஸ் நிலையத்திலுள்ள இராணுவ முகாம்மீது விடுதலைப்புலிகள் நேற்றுமுன்தினம் 'கிரனெட்' தாக்குதல் மேற்கொண்டதில் இரு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். (வி)

---

அராலித்துறையில்

# படகு சேவை சீரின்மையால் போக்குவரத்தில் தாமதம்!

(புங்குடுதீவு)

அராலித்துறையினூடாக தீவுப்பகுதிக்கானபோக்குவரத்தினை மேற்கொள்பவர்கள் தமது பயணத்திற்காக மேற்படி துறையில் பலமணிநேரம் காத்திருக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, நெடுந்தீவு, நயினாதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் இந்தப் போக்குவரத்தினால் தாமதமாவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ். நகர் மற்றும் பகுதிகளுக்கு சென்று திரும்பும் தீவுப்பகுதி மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு படகு சேவையின்றி அராலித்துறையில் காத்திருக்கிறார்கள்,

அராலித்துறையில் நடைபெறும் படகு சேவையில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்களே இந்த நிலைக்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

---

பலாலி, காங்கேசன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மழை ஆரம்பித்தபோதும் பலாலி, காங்கேசன்துறைப் பகுதிகளில் மோதல்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

நண்பகலிலும் பிற்பகலிலும் இருதடவைகள் வந்த அவ்ரோ விமானம் மல்லாகம், சுன்னாகம் பகுதிகளில் கடும் தாக்குதலை மேற்கொண்டது. இதனாலும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. (86)

---

## மழை வீழ்ச்சி தீவிரமடையும்

(கொழும்பு)

நாட்டில் வடகிழக்கு பருவப்பெயர்ச்சி மழை தீவிரமடைந்துள்ளதாக வானிலை அவதானநிலையம் அறிவித்துள்ளது.

---

ஊர்காவற்துறை

(1ம் பக்கத் தொடர்ச்சி

வீடுகள் உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த பல பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

கரம்பன் மேற்கிலுள்ள எஸ். செல்வராசா, எஸ். யோசேப் யோ. செல்வநாயகம் ஆகியோரின் வீடுகள் உட்பட பல வீடுகள் இராணுவத்தினரால் உடைக்கப்பட்டு இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (101)

---

## தமிழக ஆர்ப்பாட்டத்தில் ரயில், பஸ் தீவைப்பு

### 7 பயணிகள் படுகாயம்

(சென்னை)

மண்டல் கமிஷன் சிபாரிசுகளை அமுல்செய்வதை தடைசெய்யும் உயர் நீதிமன்ற இடைக்கால உத்தரவை ரத்துச்செய்யக் கோரி தமிழ்நாடு முழுவதும் நேற்று நடாத்தப்பட்ட 'பந்த்' தின் போது மூன்று பஸ்களும், ஒரு கடுகதி ரயிலும் தீவைத்துக் கொளுத்தப்பட்டது.

எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தினர் வைத்த இத் தீவைப்பு சம்பவத்தில் 7 பயணிகள் படுகாயமடைந்தனர்.

மண்டல் கமிஷன் சிபாரிசுகளைக் கண்டித்து வட இந்தியாவில் பலத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றபோதிலும் தமிழ்நாட்டில் இதற்கு ஆதரவாக 'பந்த்' இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

---

## புலிகள் தாக்குதலில் ஜீப் சேதம்

(மட்டுநகர்)

காத்தான்குடிக்கும், கல்லடிக்கும் இஸ்டயில் ஜீப்பில் வந்த இராணுவத்தினரை, விடுதலைப் புலிகள் தாக்கியதில் ஜீப் வண்டி பெரும் சேதமடைந்தது.

நேற்றுமுன்தினம் நடைபெற்றமேற்படிச் சம்பவத்தில் உயிரிழந்தோர் விபரம் தெரியவரவில்லை. (வி)

---

பலாலி

வடமராட்சி செல்லும் மக்களுக்கு வடமராட்சியிலுள்ள முதலுதவிச்சிகிச்சைப் பிரிவினர் அத்தியாவசிய உதவிகளை வழங்கி வருகிறார்கள்.

இந்த அகதிகளில் சிலர் அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், கோப்பாய் போன்ற பகுதிகளிலுள்ள பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். (51)

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under nmber B/100306/81.

---

யாழ்ப்பாண

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றது.

திருநெல்வேலி, தெல்லிப்பழை, உடுவில் பகுதிகளில் உள்ள லொறி உரிமையாளர்களும், சாரதிகளும் லொறிகளை பறிகொடுத்த நிலையில் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர். (வி)

---

# 3-ம் கட்ட நிவாரண வேலைகள் திட்டமிட்டபடி இடம்பெறவில்லை

(காங்கேசன்துறை)

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளில் இடம்பெயர்ந்தோருக்கான 3-ம் கட்ட நிவாரண வேலைகள் திட்டமிட்டபடி இடம்பெறவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

பல இடங்களில் 3ம் கட்ட நிவாரண பெர்மிட்டுகள்கூட இடம்பெயர்ந்தோருக்கு இன்னமும் வழங்கப்படவில்லை. இதுதொடர்பாக கிராம சேவையாளர்கள் தாங்கள் பட்டியல்கள் தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக கூறுகிறார்கள்.

இம்மாதம் 22-ம் திகதிக்குள் 3ம் கட்ட நிவாரணம் வழங்கி முடிக்கப்படவேண்டும் என அரச அதிபர் பணித்திருந்தும் நிவாரணவேலைகள் ஆமை வேகத்திலேயே இடம்பெறுவதாக கூறப்படுகிறது. (86)

---

## சிப்பாய் மரணம்

(மட்டுநகர்)

மீராவோடை இராணுவ முகாமிலிருந்து சிங்கள் இராணுவம் வெளியே வர முற்பட்டபோது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதுடன், பலர் படுகாயம் அடைந்தனர். (வி)

---

## இராணுவம் பலி

(ஆனையிறவு)

ஆனையிறவுஇராணுவமுகாம் மீது நேற்று விடுதலைப்புலிகள் 'சினைப்பர் தாக்குதல் மேற்கொண்டதில் ஒரு படைவீரர் கொல்லப்பட்டார். (வி)